மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 667/2022 |
| பெயர் | : | பாலமுருகன் (PW3) |
| த/பெ | : | ஆறுமுகம் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Manikandan , A2Murugan, A3 Selvakumar, A4Thachanamoorthy are present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27 th day of June 2024

<u>முதல் விசாரணை</u>

1) நான் புளியமரத்து அரசரடியில் வசிக்கிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்கிறேன்.சாட்சி தங்கவேலை தெரியும்.

2)என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தேதி மாதம் வருடம் நினைவில் இல்லை. அந்த கையொப்பம் நான் எங்கள் ஊரில் வைத்து சண்டை நடந்ததற்காக கையொப்பம் செய்து கொடுத்தேன். (**மேற்படி பார்வை மகஜசரில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அசா ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எங்கள் ஊரில் அரியநாயகம் ஆசாரி மகன் வீரமணிகண்டனை தெரியும். அவரது வீடு எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் அசா.1க்கும் இடையே ஏற்பட்ட சண்டையை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஊருக்குள் பேசிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2) புளியமரத்து அரசரடி வடக்கு தெருவில் கன்னியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். 19.06.2017 அன்று காலை 06.00 மணிக்கு நானும் தங்கவேலும் ஊரில் இருந்து போது புதியம்புத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து வீரமணிகண்டன் என்பவரின் வீட்டை பார்வையிட்டு

படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் அதில் நானும் சாட்சி தங்கவேலும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியும். பார்வை மகஜரில் சம்பவ இடமானது புளியமரத்துஅரசரடி ஊரில் வடக்கு தெருவில் முத்து ஆசாரி என்பவரின் ஓட்டு வீட்டிற்கு முன்பு தெரு பைப்பின் முன்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் வீரமணிகண்டனின் வீடு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ள பேச்சிமுத்து ஆசாரியின் வீட்டிற்கு வடக்கு பக்கம் காலியிடம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலியிடத்திற்கு மேற்கில் தான் அரியநாயகம் வீடு என்றால் சரிதான்.

3) நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சண்டை நடந்ததாக கேள்விபட்டதாக சொன்னது உண்மையல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.